THIRU K. M. SUBRAMANIAM : May I know whether there is any possibility of production programme being affected here because of the Aid Programme stoppage from foreign countries?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, எற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. இதிலே எந்தவிதமான தடையும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரசாயன நூல்களிலிருந்து கைத்தறித் துணிகள் உற்பத்தி

*** 572 வினு—திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

டெரிலின் முதலிய செயற்கை ரசாயன நூல்களிலிருந்து கைத்தறி ஆடைகள் உற்பத்தி செய்ய திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

பள்ளிப்பட்டுத்துணை வட்டத்தில் உள்ள சிதாராமபுரம் ஏரி

*** 573 வினு—திரு. இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டுத் துணை வட்டம் சிதாராமபுரம் ஏரியை ரிப்பேர் செய்ய எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத் திட்டத்திற்கு மேற்பார்வை பொறியாளர் ஒப்புதல் வழங்கப்பெற்ற பின்னர் வேலை தொடங்கப்படும்.

தளவாய் ஏரி மராமத்து

*** 574 வினு—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் கணியம்பாடி தொகுதியைச் சார்ந்த தளவாய் ஏரி பழுது பார்க்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :—

(அ) & (இ) தளவாய் ஏரி 1970-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பழுதுபார்க்கப்பட்டது.